

புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஸ் தனது பிறந்த நாளை முன்னிட்டு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### அணைக்கட்டில் – ஒருங்கிணைந்த

# பழக்கூழ் ஆராய்ச்சி மையம் நிறுவ நிதி ஒதுக்கீடு செய்திடுக!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 27 -

வேலூர் மக்களவைத் தொகுதியில் உள்ள அணைக்கட்டில் “ஒருங்கிணைந்த பழக்கூழ் ஆராய்ச்சி மையம்” ஒன்றை நிறுவ, போதுமான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி நாடாளுமன்ற மக்களவையில் விதி எண். 377ன் கீழ் வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. டி.எம். கதிர் ஆனந்த் கோரிக்கை விடுத்தார்.



தமிழ்நாட்டின் வேலூர் பகுதி, சிறந்த காலநிலை மற்றும் வளமான மண்ணைக் கொண்டிருப்பதால், வெப்பமண்டலப் பழங்களின் உற்பத்தி அதிகமாக உள்ளது. உள்ளூர் விளைச்சல்கள், குறிப்பாக மாம்பழம், வாழைப்பழம், கொய்யா, சீதாப்பழம் போன்ற பழங்களின் அதிக விளைச்சல், பிராந்திய தோட்டக்கலைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கின்றன.

ஆனால், வேலூரில் தனியாகவோ அல்லது அரசு நிதியுதவியுடனோ “ஒருங்கிணைந்த பழக்கூழ் ஆராய்ச்சி மையம்” எதுவும் இல்லை.

மாம்பழம் போன்ற பழச்சாறுகளின் சுவையையும், சேமிப்புக் காலத்தையும் மேம்படுத்துவதற்காக, சிட்ரிக் மற்றும் மாலிக் அமிலங்களை உகந்ததாக்குவதில் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி ஆய்வுகளை அரசு தொடங்க வேண்டும்.

ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்துவதற்காக, வாழைப்பழக் கூழ் மற்றும் தோல் நார் ஆகியவற்றை பால் பொருட்களில் (தயிர் மற்றும் யோகர்ட் போன்றவை) சேர்ப்பது குறித்த ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

தாவர வேதிப் பகுப்பாய்வின் மூலம், பிராந்தியப் பழங்கள் மற்றும் பனை மரங்களின் சதைப் பகுதியை ஆய்வு செய்து, ஃபிளாவனாய்டுகளைக் கண்டறிந்து, செயல்பாட்டு உணவுகள் மற்றும் மருந்துப் பயன்பாடுகளுக்கான உயிரியல் செயல்பாட்டுக் கலவைகளைப் பிரித்தெடுப்பது, பழக்கூழ் துறைக்கு மதிப்புக் கூட்டலை வழங்கும்.

வேம்பு மற்றும் சீதாப் பழம் போன்ற பழக்கூழ் சாறுகளைப் பயன்படுத்தி, ஆக்சிஜனேற்றத் தடுப்பு மற்றும் பாக்டீரியா எதிர்ப்புப் பயன்பாடுகளுக்காக நானோ துகள்களைத் தொகுக்க பசுமை நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

இதை நனவாக்கவும், உற்பத்தி செய்யப்படும் பழங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும், தமிழ்நாட்டின் வேலூரில் உள்ள அணைக்கட்டில் “ஒருங்கிணைந்த பழக்கூழ் ஆராய்ச்சி மையத்தை” நிறுவ வேண்டும் என்று மத்திய அரசை நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கதிர் ஆனந்த் எம்.பி. நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377ன் கீழ் கோரிக்கை விடுத்தார்.

### வேலையில்லா இளைஞர்களுக்கு

# மாதம் ரூ.4,000 வழங்கும் திட்டத்தை அறிவிக்க வேண்டும்!

## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 27-

அளித்த வாக்குறுதியை, வரும் ஆகஸ்ட் 5ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ள த.வெ.க. அரசின் முதல் நிதிநிலை அறிக்கையிலேயே நிறைவேற்ற வேண்டும் என்று கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான ஈ.ஆர். ஈஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக வெற்றிக் கழகம் தேர்தல் அறிக்கையில் ஆட்சிக்கு வந்தால் வேலையில்லா இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.4,000 வழங்கப்படும் என்று அந்த வாக்குறுதியை நம்பி லட்சக்கணக்கான இளைஞர்கள் வாக்களித்து தற்போதைய அரசை ஆட்சிக்கு கொண்டு வந்ததாக குறிப்பிட்டுள்ளார். வேலை தேடும் காலத்தில் தேவையான நிதி ஆதரவாகவும், தவறான வழியில் பணம் சம்பாதிக்கும் நிலையைத் தவிர்க்கவும் இந்த உதவித்தொகை பயனுள்ளதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

புதிய முதலீடுகள் எதிர்பார்த்த அளவில் வராததும், அரசு பணியிடங்களில் புதிய நியமனங்கள் இல்லாததும் காரணமாக வேலையில்லா இளைஞர்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதாக அவர் கூறியுள்ளார். பல இளைஞர்கள் பெற்றோரிடம் பணம் கேட்க முடியாமல் மனஅழுத்தத்துடன் வாழும் சூழல் இருப்பதாகவும், வருமானமின்றி இருக்கும் இளைஞர்கள் தன்மானத்துடன் வாழ இந்தத் திட்டம் பெரும் உதவியாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, நிதிநிலையை காரணம் காட்டி திட்டத்தைத் தவிர்க்காமல், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வேலையில்லா இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.4,000 வழங்கும் திட்டத்தை முதல் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்க வேண்டும் என்று ஈ.ஆர். ஈஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

### கல்பாக்கம் அணுமின் நிலையத்திலிருந்து தோரியம் மூலமாக பெறப்படும் அணுமின்சக்தி

# இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பிற்கு உதவியாக உள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 27-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 23 ஜூலை 2026 அன்று மாநிலங்களவையில் கல்பாக்கம் அணுமின் நிலையத்திலிருந்து தோரியம் மூலமாகப் பெறப்படும் அனுமின் சக்தியின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளது? என்றும், புளூட்டோனியம் தனிமத்தின் பயன்பாடு எந்த அளவில் பயனுள்ளதாக உள்ளது? என்றும், இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்த ஒன்றிய அரசிடம் வேறு திட்டங்கள் ஏதும் உள்ளதா? என்றும், ஒன்றிய அரசின் அணுசக்தித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றியஅரசின் அணுசக்தித் துறை; துறை இணைய மைச்சர் அவர்கள் அளித்ததில் வருமாறு:

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், யூரேனியம் இறக்குமதியை குறைத்துக் கொள்ளவும், தோரியம் தனிமத்தின் மூலம் செயல்படும் பல்வேறு திட்டங்களை அணுசக்தித் துறை மேற்கொண்டு வருகிறது என்றும், முதல் நிலையில் யூரேனியம் தனிமத்தை பயன் படுத்தி கடின தண்ணீர் அனுமின் உலைகளையும் இரண்டாம் நிலையில், புளூட்டோனியம் தனிமத்தைப் பயன்படுத்தி வேகமாக செயல்படும் அணுமின் உலைகளையும், மூன்றாவது நிலையில் தோரியம் தனிமத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பினை அனுசக்தித் துறை உறுதி செய்துள்ளது என்றும், பாபா அணுமின் சக்தி நிலையத்திலும் கல்பாக்கம் இந்திராகாந்தி அணுமின் சக்தி நிலையத்திலும், தோரியம் தனிமத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், மும்பாய் பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்தின் உதவியுடன் அதிவேக அணு உலைகளின் மூலம் கார்பன் உமிழ்வு இல்லாத ஹைட்ரஜன் தயாரிப்பில் ஒன்றிய அரசு சாதனை புரிந்துள்ளது என்றும், காப்பர் மற்றும் குளோரின் தனிமங்களின் மின் பகுப்பாய்வு முறைகளை பின்பற்றி மின்சாரம் தயாரிக்கப்படுவதுடன் கூடவே ஹைட்ரஜன் உற்பத்தியும் உறுதி செய்யப் படுவதால், உரத்துறை, எஃகுத்துறை, வாகனப் போக்குவரத்து ஆகிய துறைகளில் ஹைட்ரஜனின் பயன்பாடுகள் அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது என்றும் பாரத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தோரியம் தனிமத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை தயாரிக்கு முயற்சியில் ஒன்றிய அரசு உறுதியாக செயல்பட்டு வருகிறது என்றும் ஒன்றிய அரசின் அணுசக்தித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் விரிவான பதிலை அளித்துள்ளார்.

### ஏற்றுமதி ஊக்குவிப்பு குறித்து வழக்கமான பதிலை தருவதா?

# ஏற்றுமதியில் முதன்மை வகிக்கும் மாவட்டங்களின் தேவைக்கு அரசின் பதில் என்ன?

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 27 -

ஏற்றுமதி ஊக்குவிப்பு குறித்து வழக்கமான பதிலை மட்டுமே அளித்த ஒன்றிய அரசு; ஈரோடு உள்ளிட்ட ஏற்றுமதி மாவட்டங்களின் தேவைகளுக்கு தெளிவான பதில் இல்லை என மக்களவையில் கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.



ஈரோடு மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஜவுளி, கைத்தறி, ஆடைகள், மசாலா பொருட்கள் மற்றும் வேளாண் சார்ந்த பொருட்கள் உள்ளிட்ட தொழிலாளர் அதிகம் சார்ந்த துறைகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதில், குறிப்பாக தமிழ்நாட்டின் ஈரோடு போன்ற ஏற்றுமதி மைய மாவட்டங்களில் உற்பத்தியாகும் பொருட்களை உலகச் கொண்டு செல்ல இந்தியத் தூதரகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகங்கள் வகிக்கும் பங்கை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சகம் மதிப்பீடு செய்துள்ளதா என்று விளக்கம் கோரினார்.

மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் ஏற்றுமதி மையத் தொழில் துறை குழுமங்களின் பொருட்களை ஊக்குவிக்கும் வகையில், இந்தியத் தூதரகங்கள் மேற்கொண்ட வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகள், சந்தை வசதிகள் ஏற்படுத்துதல், வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்புகள் மற்றும் துறைவாரியான விழிப்பு ணர்வு முயற்சிகள் குறித்த விவரங்களையும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் மற்றும் பிற தொடர்புடைய அமைச்சகங்களுடன் இணைந்து, சுங்கம் அல்லாத வர்த்தகத் தடைகள், சுகாதார மற்றும் தாவர சுகாதார (SPS) விதிமுறைகள், நிலைத்தன்மைத் தரநிலைகள் மற்றும் இந்திய ஏற்றுமதியை பாதிக்கும் பிற சந்தை அணுகல் சவால்களை எதிர்கொள்ள வெளிநாட்டு அரசுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்தும் விளக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கு வெளியுறவுத் துறை அமைச்சகம் அளித்த பதில் வருமாறு:-

(அ) மற்றும் (ஆ): ஆம் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் மற்றும் இந்தியத் தூதரக அலுவலகங்கள் மேற்கொள்ளும் வர்த்தக மற்றும் வணிக மேம்பாட்டு நடவடிக்கைகள் உட்பட அவற்றின் பணிகளை அமைச்சகம் தொடர்ந்து மதிப்பீடு செய்து வருகிறது. ஜவுளி, கைத்தறி, ஆடைகள், மசாலா பொருட்கள் மற்றும் வேளாண் சார்ந்த பொருட்கள் போன்ற தொழிலாளர் அதிகம் சார்ந்த துறைகளி லிருந்து நாடு முழுவதும் நடைபெறும் ஏற்றுமதியை ஊக்குவிப்பது, இந்தியத் தூதரகங்களின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாகும்.

இந்தத் தூதரகங்களின் வணிகப் பிரிவுகள், இந்திய ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில்கள் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்பதற்கு உதவுவதுடன், வாங்குபவர்விற்பனையாளர் சந்திப்புகள், சாலை விளக்க நிகழ்ச்சி கள் (Roadshows) ஆகியவற்றை நடத்தி, சந்தை தொடர்பான தகவல்களையும் வழங்குகின்றன. மேலும், MSME நிறுவனங்கள் உட்பட இந்திய ஏற்றுமதியாளர்களிடமிருந்து வரும் வர்த்தகக் கேள்விகளுக்கு பதிலளிப்பதோடு, வர்த்தக வாய்ப்புகள், டெண்டர்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பான தகவல்களையும் பரப்புகின்றன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டு இயக்கத்தின் (Export Promotion Mission EPM) கீழ், இந்தியத் தூதரகத் தலைவர்கள் (Heads of Missions HOMs) மற்றும் வணிக பிரதிநிதிகள் (Commercial Representatives CRs) ஆகியோருக்காக ஐந்து உயர்மட்டப் பயிலரங்குகள் நடத்தப்பட்டு, ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் “நாடு முழுவதையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறை” (Whole of Nation Approach) வலுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஜவுளி மற்றும் கைத்தறி பொருட்களின் ஏற்றுமதியை முன்னுரிமை நாடுகளில் ஊக்குவிக்கும் பணிகளில், ஜவுளித்துறை அமைச்சகத்துடன் இணைந்து வெளியுறவுத் துறை அமைச்சகம் செயல்பட்டு வருகிறது.

அதேபோல், ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (One District One Product ODOP) திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் பொருட்களின் சந்தைப்படுத்தலுக்கும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் மற்றும் MSME நிறுவனங்கள் பயன்பெற்று வருகின்றன.

(இ): வெளியுறவுத் துறை அமைச்சகமும், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களும், வர்த்தகத் துறை, பிற தொடர்புடைய அமைச்சகங்கள், மாநில அரசுகள், ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில்கள் மற்றும் வர்த்தக அமைப்புகளுடன் இணை ந்து, சுங்கம் அல்லாத வர்த்தகத் தடைகள், சந்தை அணுகல் தேவைகள், சுகாதார மற்றும் தாவர சுகாதார (SPS) நடவடிக்கைகள், தொழில்நுட்ப வர்த்தகத் தடைகள் (TBT) உள்ளிட்ட விவகாரங்க ளில் வெளிநாட்டு அரசுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் தொடர்ந்து தொட ர்பு கொண்டு செயல்பட்டு வருகின்றன.

மேலும், வெளிநாடுகளில் அமல்படுத்தப்படும் புதிய தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை மாற்றங்கள் குறித்து இந்தியாவில் உள்ள தொடர்புடைய அதிகாரிகளுக்கும் பங்குதாரர்களுக்கும் தொடர்ந்து தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய ஏற்றுமதிக்கான சந்தை அணுகலை பாதுகாத்து விரிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும்.

இவ்வாறு பதிலளித்துள்ளார்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், திருமுருகன்பூண்டி, ராக்கியாபாளையம் பகுதியில் நகர கழகத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கலைஞர் அறிவாலயம் கட்டிட அபிவிருத்தி பணிகளுக்காக கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ரூ.1 இலட்சம் நிதி வழங்கினார். உடன் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார், நகர கழக செயலாளர் கிருஷ்ணசாமி (எ) மூர்த்தி, மாவட்ட பிரதிநிதி மாணிக்க முத்தி, வட்டக் கழக செயலாளர்கள் மனோகர், சிவக்குமார் உள்ளனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் கே.கே.துரைசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ். தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.